# அதிசய வார நடவடிக்கை
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# ‘ஏன் சிவப்பு?’





**<u>கண்ணோட்டம்:</u>**

அதிசய வாரம் என்பது பிள்ளைகள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தாமே தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பையொட்டி ஆழமாக அறிந்துகொள்ளும் ஒரு திட்டப்பணியாகும். அதிசய வாரத்தின்போது நடத்தப்படும் நடவடிக்கைகள் பிள்ளைகள் தங்களுக்கு எழும் வினாக்களுக்கு விடை கண்டறியவும், தெரிவுகளைச் செய்யவும், சுயமாக முடிவுகளை எடுக்கவும் வாய்ப்பு அளிக்கின்றன.

இந்நடவடிக்கை இந்திய பாரம்பரிய நடனங்களைப்பற்றியும் இந்நடனங்களின் கூறுகளைளைப்பற்றியும் பிள்ளைகள் ஆராய்ந்து அறிந்துகொள்ள உதவுகிறது.

## <u>கற்றல் குறிக்கோள்கள்:</u>

## <u>கற்றல் குறிக்கோள் 1 : தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் விரும்புதல்**

✓ புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (எ-டு: புத்தகத்திலுள்ள படங்களைச் சுட்டிக்காட்டிப் பார்த்தல், கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்விகள் கேட்டல்)
✓ தாய்மொழியில் நடத்தப்பட்ட கற்றல் அனுபவங்களைப்பற்றிப் பேசுதல்
✓ எண்ணங்களையும் தகவல்களையும் தாய்மொழியில் வெளிப்படுத்த அடையாளம் அல்லது குறியீடுகள் வரைதல், உருவாக்குதல்

## <u>கற்றல் குறிக்கோள் 2 : அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்</u>

1. **புரிந்துணர்வுடன் கேட்டல்**

✓ பேசும்போது எதிரில் இருப்பவரோடு கண் தொடர்புகொள்ளுதல்
✓ ஒன்று அல்லது இரண்டு படிநிலைகளைக்கொண்ட கட்டளைகளைக் கேட்டுச் செயற்படுதல்

**இந்நடவடிக்கையில் ஈடுபடும்போது பிள்ளைகள்**,

- சக மாணவர்களின் ஒத்துழைப்பையும் ஆசிரியரின் ஆலோசனையையும் பெறுகிறார்கள்.
- சுயமுனைப்பு, ஆராய்தல், பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றின்வழி மகிழ்ச்சியான சுய கற்றல் அனுபவத்தைப் பெறுகிறார்கள்.
- தங்களின் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்கிறார்கள்.

# 1. நான் தெரிந்துகொள்ள விரும்புவது...

1.1 பிள்ளைகள் வாக்கெடுப்பின்மூலம் அதிசய வாரத் திட்டப்பணிக்கு ‘ஏன் சிவப்பு’ என்னும் புத்தகத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.

பிள்ளைகள் பின்வரும் வினாக்களை எழுப்பி அதற்கான விடைகளைக் கண்டறிய விரும்பினார்கள்.

- இந்திய கிராமிய நடனங்களின் வகைகள் யாவை?
- இந்த நடனங்களை எங்கே கற்றுக்கொள்ளலாம்?
- நடனம் ஆடும்போது ஏன் பல வண்ண உடைகளை அணிந்துகொள்ள வேண்டும்?





**ஆசிரியர் பெரிய புத்தகத்திலுள்ள கதையைப்பற்றி பிள்ளைகளோடு கலந்துரையாடுதல்**



**பிள்ளைகள் எழுப்பிய கேள்விகளை ஆசிரியர் வெள்ளைத்தாளில் எழுதுதல்**

## வலைப்பின்னலில் பதிவு செய்தல்

1.2 இந்திய கிராமிய நடனங்களில் என்னென்ன கூறுகள் இருக்கின்றன என்று பிள்ளைகள் ஆசிரியருடன் கலந்துரையாடினார்கள். பிறகு, ஆசிரியர் வலைப்பின்னலில் அவற்றைப் பதிவு செய்தார்.





**பிள்ளைகள் கூறும் கருத்துகளை ஆசிரியர் வலைபின்னலில் பதிவு செய்தல்**

1.3 பிள்ளைகள் இந்திய கிராமிய நடனங்களைக் ஒளிக்காட்சியில் பார்த்தார்கள். அவர்களும் அதேபோல் ஆடிப்பார்த்து மகிழ்ந்தார்கள்.





**பிள்ளைகள் ஒளிக்காட்சியைப் பார்த்து ஆடிப் பாடுதல்**

## 2. நான் கண்டுபிடித்தவை...

### கற்றல் பயணம்

2.1 பிள்ளைகள் கிராமிய நடனங்களைக் காணத் தங்கள் பெற்றோருடன் சமூக மன்றத்திற்குப் பேருந்தில் சென்றார்கள்.





2.2 பிள்ளைகள் சமூக மன்றத்தில் கிராமிய நடனங்களைப் பார்த்தப் பிறகு ஒரு சில நடனங்களை ஆடிப் பார்த்தார்கள்.

பிள்ளைகள் பொய்க்கால் குதிரை நடனத்தை ஆடிப்பார்த்தார்கள்.













பிள்ளைகள் மயிலாட்டத்தை ஆடிப்பார்த்தார்கள்.





பிள்ளைகள் கரகாட்டம் ஆட முயற்சி செய்தார்கள்.






பிள்ளைகள் கோலாட்டம் ஆட முயற்சி செய்தார்கள்.




2.3 பிள்ளைகள் பயிற்சியாளர்களிடம் நடனங்களைப்பற்றிக் கேட்டு அறிந்துகொண்டார்கள்.



இந்த நடனங்களை அடிக்கடி ஆடுவீர்களா?

**பதில்**
இந்த நடனங்களைச் சமூக மன்றங்களிலும் மற்ற கொண்டாட்டங்களின் போதும் ஆடுவோம்.



இந்த நடனத்தை எத்தனை நாட்களில் கற்றுக் கொள்ளலாம்?

**பதில்**
இதைக் கற்றுக்கொள்ள நிறைய வருடங்கள் ஆகலாம்.

2.4 பெற்றோர்களும் கரகத்தைத் தூக்கிப் பார்த்துவிட்டு,“எப்படி இந்தக் கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடுகிறீர்கள்?”, என்று நடனக்காரர்களிடம் கேட்டார்கள்.





# 3. நான் தெரிந்துகொண்டவை...

3.1 பிள்ளைகள் கிராமிய நடனத்தைப்பற்றி அறிந்துகொண்டவற்றைப் படங்களாக வரைந்தும், விளக்கப்படமாகச் செய்தும் ஆவணப்படுத்தினார்கள்.





3.2 பிள்ளைகள் கிராமிய நடனங்களை அதற்குரிய பொருள்களுடன் சரியாக இணைத்தார்கள்.






3.3 பிள்ளைகள் பொய்க்கால் குதிரை, மயில் தோகை, கரகம் ஆகியவற்றின் படங்களுக்கு வண்ணந்தீட்டி அலங்கரித்தார்கள்.













3.4 பிள்ளைகள் தாங்கள் வண்ணந்தீட்டிய படத்தைப்பற்றிப் பேசினார்கள்.

3.5 பிள்ளைகள் கிராமிய நடனத்திற்குப் பயன்படுத்தும் பொருள்களைப்பற்றிய புதிர் விளையாட்டில் ஈடுபட்டார்கள்.





**************************************